# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

# அசல் வழக்கு எண்.88/2023

**வா.சா.1** - நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சி- நாள் 02-03-2026

பெயர் = சீனிவாசன்

வா.சா.1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் கு.வி. தொடர்ச்சி-

(1) வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலப்பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஏன் மேற்படி மூலப்பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞர் மேற்படி பத்திரம் தேவையற்றது என்றார் அதனால் நான் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கிற்கு தேவைப்பட்டால் மேற்படி மூலப்பத்திரத்தை நான் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். எனது தாத்தா, பாட்டிக்கு மூலப்பத்திரத்தின்படி எவ்வளவு இடம் பாத்தியப்பட்டதோ மேற்படி அளவுகளுக்கு உட்பட்டுதான் வா.சா.ஆ.1 ஆவணத்தின் அளவுகளும் இருக்க முடியும் என்றால் சரிதான். இவ்வழக்கிற்கு முந்தைய வழக்கான அசல் வழக்கு எண்.225/1999 வழக்கில் எனது தாத்தா, பாட்டி இவ்வழக்கு சொத்து குறித்து மேற்படி வழக்கில் குறிப்பிட்ட அடி அளவுகளை நான் ஒப்புக் கொள்கிறேனா என்றால் ஒப்புக் கொள்கிறேன்.

(2) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி தாவா சொத்தின் வடக்கு பக்கத்தின் கிழமேல் அளவு எவ்வளவு என்றால் சாட்சி ஞாபகம் இல்லை ஆவணத்தை பார்த்தால்தான் தெரியும் என்று சாட்சியமளித்ததால் சாட்சி வா.சா.ஆ.1 ஆவணத்தை படித்துப் பார்த்து 29 1/2 அடி என்று சாட்சியமளித்தார். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி தாவா சொத்தின் தெற்கு பக்கத்தின் கிழமேல் அளவு எவ்வளவு என்றால் சாட்சி வா.சா.ஆ.1 ஆவணத்தை படித்துப் பார்த்து 31 அடி என்று சாட்சியமளித்தார். எனது சொத்திற்கு கிழக்கு பக்கம் தாவா சொத்தும், மேற்கு பக்கம் ஒரு சந்தும் உள்ளது என்றால் சரிதான். எனது சொத்தின் மேற்கு சந்திற்கு மேற்கே அழகர்சாமி என்பவரின் இடம் உள்ளது என்றால் சரிதான். எனது சொத்தின் வடபுறம்

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.02 19:28:20 +0530

கிழமேல் அளவு என்பது மேற்கு பக்கமுள்ள சந்தையும், கிழக்கு பக்கமுள்ள தாவா சொத்தையும் சேர்த்துதான் வடபுறம் கிழமேல் அளவு என்றால் சரிதான்.

(3) எனது சொத்தில் உள்ள கட்டிடத்தின் வடபுறம் கிழமேல் அளவு எவ்வளவு என்றால் நகராட்சி கட்டிட அனுமதி வரைபட ஆவணத்தை பார்த்தால்தான் தெரியும். எனது கட்டிடத்தின் மேற்கே உள்ள சந்திற்கு எவ்வளவு அடி போட்டுள்ளேன் என்றால் மேற்படி நகராட்சி கட்டிட அனுமதி வரைபட ஆவணத்தை பார்த்தால்தான் தெரியும். எனது சொத்திலுள்ள கட்டிடத்தின் அளவும், மேற்கு பக்கமுள்ள சந்து அளவும் எனக்கு தெரியும் என்றும், அதனை தற்போது குறிப்பிட்டால் எனக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு அதிகமாக நான் கட்டிடம் கட்டியது நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்பதால்தான் தெரியாது என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(4) நான் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள எனது சொத்தின் கிழமேல் அளவு தென்வடல் அளவு குறிப்பிடாமல் எனது சொத்திற்கு கிழக்கு பக்கமுள்ள சந்தின் அடி அளவுகளை மட்டும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஏன் மேற்படி அடி அளவுகளை சொல்லவில்லை என்றால் இவ்வழக்கிற்கு தேவையில்லை, அதனால் சொல்லவில்லை. எனது தாத்தா, பாட்டிக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற ஆவணத்தின் அடிப்படையில் வடபுறம் கிழமேல் 27 அடிதான் என்றும், ஆனால் வா.சா.ஆ.1 ஆவணத்தில் 29 1/2 அடி என்று அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(5) வா.சா.ஆ.4 ஆக மேல்முறையீட்டுவழக்கு எண்.40/2002 ன் தீர்ப்பாணையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு சரிதான் என்று சாட்சியமளித்தார். எனது தாத்தா, பாட்டியின் பாத்திய ஆவணம் என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் சரிதான். டவுண் சர்வே எண்.8 தான் எனது சொத்து என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ஆவணத்தில் டவுண் சர்வே எண்.8 ற்கான வரைபடத்தில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தின் வடக்குப் பக்கம் கிழமேல் அளவு 8.5 மீட்டர் என்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது, இது உத்தேசமாக 27.8 அடி வரும், பிரதிவாதி சான்றாவணம் 3 மற்றும் 4 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளை கணக்கிடுகின்றபோது வடக்குப் பக்கம் கிழமேல் அளவு 9 கெஜம் என்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.02 19:28:26 +0530

தெரியவருகிறது, 9 கெஜம் என்று கூறப்படுவது 27 அடியைக் குறிக்கும் என்று குறிப்பிட்டுள்ளதை சாட்சியிடம் வாசித்துக் காண்பித்தபோது சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு சரிதான் என்று சாட்சியமளித்தார்.

(6) மேற்படி முன்வழக்கு 2ம் மேல்முறையீடு வரை சென்றது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.5 ஆவணம்தான் 2ம் மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பு நகல் என்றால் சரிதான். மேற்படி 2ம் மேல்முறையீட்டு வழக்கு நிலுவையிலுள்ளபோதுதான் வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் மேற்படி சொத்தை தானம் பெற்ற பிறகு எனது தாத்தா, பாட்டி அமைத்த கட்டிட அமைப்புகளை முழுமையாக அகற்றி நான் புதிதாக முன்வழக்கில் குறிப்பிட்டுள்ள அளவைவிட கிழமேல் அளவுகள் அதிகரித்து புதிதாக கட்டிடம் கட்டியுள்ளேன் என்றால் சரிதான், எனக்கு பாத்தியப்பட்ட சொத்திற்குள் தான் கட்டிடம் கட்டியுள்ளேன்.

(7) எனது பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எனது தாத்தா, பாட்டி கட்டிய வீட்டின் கிழமேல் அளவுகளையும், நான் புதிதாக கட்டிய வீட்டின் கிழமேல் அளவுகளையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அது தேவையற்றது அதனால் குறிப்பிடவில்லை. எனது தாத்தா, பாட்டி நடத்திய வழக்கின் சந்து அளவைவிட தற்போது உள்ள சந்து அளவு குறைந்துள்ளது என்றால் சரிதான், மேற்படி சந்து என்னுடையது. முந்தைய வழக்கில் குறிப்பிட்டுள்ள அடி அளவுகள் தற்போது குறைந்துள்ளதால் மேற்படி வழக்குகளில் ஏற்பட்ட தீர்ப்புகளை எனக்கு சாதகமாக பயன்படுத்த இயலாது என்றால் சரியல்ல. நான் எனது தாத்தா, பாட்டிக்கு பாத்தியமான அடி அளவுகளை விட அதிகமான அளவை, அதாவது பிரதிவாதியின் மேற்கு பக்க சந்துப்பகுதியில் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.

(8) பிரதிவாதி அவருடைய பழைய வீட்டை முழுமையாக இடித்துவிட்டு என்னைப்போல் புதிதாக கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் எனது தாத்தா, பாட்டிக்கு பாத்தியப்பட்ட ஆவணம் என்றால் சாட்சி எனக்கு தெரியாது மேற்படி ஆவணத்தை என்னிடம் காண்பிப்பதற்கு பதிலாக எனது வழக்கறிஞரிடம் காண்பியுங்கள் என்று கூறினார், சாட்சியிடம் மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ஆவண எண் எனது தாத்தா, பாட்டி எனக்கு தானம் எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.1 ஆவணத்தில்

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.02 19:28:33 +0530

குறிப்பிடப்பட்டுள்ள ஆவண எண் மற்றும் தேதியை பார்த்து வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தாத்தா, பாட்டிக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிட்டுள்ள ஆவண எண் மற்றும் தேதிதான் என்னிடம் தற்போது காண்பிக்கப்படும் ஆவணத்திலும் குறிப்பிட்டுள்ளது என்று வா.சா.ஆ.1 ஆவணத்தையும், சாட்சியிடம் தற்போது காண்பித்த ஆவணத்தையும் படித்துப் பார்த்து சரிதான் என்று சாட்சியமளித்தார், பின்பு நீதிமன்றம் அவரிடம் தற்போது காண்பிக்கப்பட்டுள்ள ஆவணத்தின் சரத்துகளை படித்துப்பார்க்குமாறு கூறியபோது சாட்சி மேற்படி ஆவணத்தை படித்துப் பார்க்கத் தெரியாது என்று சொல்லியதால் குறுக்கு விசாரணை செய்யும் வழக்கறிஞர் மேற்படி ஆவணத்தின் சரத்துக்களை அதாவது யார் யாரிடம் கிரையம் பெற்றார் என்பதை படித்துக் காண்பித்தபோது சாட்சி சரிதான் என்று சாட்சியமளித்தார். மேற்படி ஆவணம் **பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(9) பி.சா.ஆ.1 ஆவணத்தில் வடபுறம் கிழமேல் 9 கெஜம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஆவணத்தின் அடிப்படையில்தான் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ஆவணத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது என்றும், பி.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அடி அளவுகளுக்கு உட்பட்டுதான் வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றும், ஆனால் 1 1/2 அடி அதிகமாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவின்படி நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், ஆணையர் தாவா சொத்தை பார்வையிடும்போது நான் ஊரில் இல்லை. எனது பெற்றோர் அந்த சமயம் இருந்தார்கள் என்றால் சரிதான், எனது மனைவியும் இருந்தார், எனது பெற்றோர் வயதானவர்கள் அதனால் அளந்ததை அவர்களால் பார்க்க முடியவில்லை, வீட்டில்தான் இருந்தார்கள்.

(10) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் எனக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் சாட்சி அறிக்கை மற்றும் வரைபடத்தை படித்துப் பார்த்து ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடமும், நகராட்சி கட்டிட அனுமதி வரைபடத்தையும் ஒப்பீடு செய்து பார்த்தால்தான் சொல்ல இயலும், அதனால் காலஅவகாசம் கோரினார். என்னிடம் கேட்கப்படும் கேள்விக்கு பதில் கூறினால் வழக்கின் உண்மைதன்மை தெரிந்துவிடும் என்றும், அது எனக்கு

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.02 19:28:40 +0530

பாதகமாக அமைந்துவிடும் என்பதால் கால அவகாசம் கோருகிறேன் என்றால் சரியல்ல.

வா.சா.1 வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.02 19:28:47 +0530